**செய்தி வெளியீடு எண்: 008** **நாள்: 02.01.2018**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை இன்று (2.1.2018) முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எம். தமிமுன் அன்சாரி, திரு. உ. தனியரசு மற்றும் திரு. கருணாஸ் ஆகியோர் சந்தித்து, தமிழ் மொழியின் சிறப்புகளை உலகெங்கும் கொண்டு செல்லும் வகையில் புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை ஏற்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசின் சார்பில் பத்து கோடி ரூபாய் நிதி வழங்கியமைக்காகவும், திண்டுக்கல்லில் 31.12.2017 அன்று நடைபெற்ற புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் தமிழக சிறையில் ஆயுள் தண்டனை பெற்று பத்து ஆண்டுகள் வரை சிறைவாசம் அனுபவித்து வரும் சிறைக் கைதிகளை சட்டத்திற்கு உட்பட்டு மற்றும் சிறை விதிகளுக்கு உட்பட்டு மனிதாபிமான அடிப்படையில் முன்விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்தமைக்காகவும், முத்தலாக் தடை மசோதாவில் தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டிற்காகவும் தங்களது நன்றிகளை தெரிவித்துக் கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 2.1.2018**